DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
DHARAPURAM

**SC. No:145/2021 Deposition of Witness for : P.W.6**

| | | | |
|---|---|---|---|
| Name | : சிரஞ்சீவி | Caste | |
| Father's Name | : சின்னச்சாமி | Calling | |
| Age | : | Taluk | |
| Village | : | District | |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 21-11-2025

**முதல் விசாரணை**

நான் வெள்ளகோவிலில் குடியிருக்கிறேன். தனியார் நிறுவனத்தில் பணிபுரிகிறேன். எதிரி கடைக்கு வரும் வகையில் எனக்கு தெரியும். டாக்டர் தனபதி வீட்டிற்கு எங்கள் நிறுவனத்தில் இருந்து ஒரு LED TV பைனான்ஸ் மூலம் கொடுத்து இருந்தோம்அதற்காக ரூபாய் 30,000 கடன் கொடுத்திருந்தோம். அதை வசூல் செய்வதற்காக கடந்த 11/5/2017 ஆம் தேதி மாலை சுமார் 7.15–7.30 மணிக்குள் அவர்கள் வீட்டிற்கு சென்றிருந்தேன். அவரது வீட்டிற்கு வெளியே நின்று அவருக்கு போன் செய்தேன். மேற்படி மருத்துவர் போனை எடுக்கவில்லை. இரண்டாவது முறை போன் செய்தேன் அப்போதும் போன் எடுக்கவில்லை. அப்போது உள்ளே சண்டையாக இருந்தது என்ன சண்டை என்று தெரியவில்லை. மேற்படி இடம் இருட்டான இடம் லைட் எதுவும் இல்லை. அப்போது ஒரு நபர் வீட்டில் இருந்து வெளியே ஓடி வந்தார். சத்தமாக இருக்கிறது என்று சொல்லி நான் மீண்டும் கடைக்கு சென்று விட்டேன். மேற்படி நேரத்தில் இருட்டாக இருந்ததால் எனக்கு யார் என்று தெரியவில்லை. மறுநாள் போலீசார் கடைக்கு வந்தார்கள். கடன் வசூலிக்க சென்றது குறித்து விசாரித்தார்கள் பின்னிட்டு போலீசார் என்னிடம் குடும்பத் தகராறு காரணமாக ராக்கி என்பவர் ஒரு நபரை குத்தி விட்டதாக என்னிடம் சொன்னார்கள். அந்த

இடத்தில் நான் இருந்தேனா என்று கேட்டார்கள் நான் கிளம்பி கடைக்கு வந்து விட்டேன் என்று சொன்னேன்.

**( அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதிக்கப்பட்ட பிறகு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

போலீசார் விசாரணையின் போது டாக்டர் வீட்டிலிருந்து சட்டை இல்லாமல் பேண்ட் அணிந்த நபர் டாக்டர் வீட்டு கேட்டை திறந்து கொண்டு வெளியே ஓடி வந்ததாகவும், அவருக்கு பின்னால் இரண்டு நபர்கள் வந்ததாகவும் அதில் ஒருவருக்கு வயிற்றில் ரத்தக்காயம் இருந்ததாகவும் அவர்களை விசாரிக்க காயத்தோடு இருந்தவர் சுப்பிரமணியின் தம்பி என்றும், மற்றொரு நபரின் பெயர் சுப்பிரமணி என்றும் சட்டை இல்லாமல் ஓடியவர் ராக்கி என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரி எங்கள் நிறுவனத்தின் வாடிக்கையாளர் என்பதால் நடந்த சம்பவத்தை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

முதல் விசாரணையில் சொன்ன விபரங்களை தான் நான் போலீசார் என்னை விசாரித்த போது சொன்னேன் என்றால் சரிதான்

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN
Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.11.21 18:42:58 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
DHARAPURAM

**SC. No: 145/2021 Deposition of Witness for : P.W.7**

| | | | |
|---|---|---|---|
| Name | : செல்வராஜ் | Caste | |
| Father's Name | : S.மணி | Calling | |
| Age | : | Taluk | |
| Village | : | District | |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 21-11-2025

**முதல் விசாரணை**

நான் கச்சேரிவலசில் குடியிருக்கிறேன். தறி தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 11.05.2017 ஆம் தேதி மாலை சுமார் 7:30 மணிக்கு வீட்டிலிருந்து பைக்கை எடுத்துக் கொண்டு வெளியே சென்றேன். டாக்டர் தனபதி என்பவரது வீடு எங்களது வீட்டிற்கு எதிரில் உள்ளது. அவரது போறது வீட்டில் இருந்து ஒரு நபர் சட்டை அணியாமல் வெளியே வந்தார். அவருக்குப் பின்னால் இரண்டு நபர்கள் வெளியே வந்தார்கள் அதில் ஒரு நபருக்கு வயிற்றில் காயம் இருந்தது. பின்னால் வந்த இரண்டு நபர்களும் டிவிஎஸ் எக்ஸ்எல் வாகனத்தில் ஏறி சென்று விட்டார்கள். காயமடைந்த நபரின் பெயர் தங்கராஜ். உடன் வந்தது அவருடைய அண்ணன் சுப்பிரமணி என்று தெரிந்து கொண்டேன். சட்டையில்லாமல் ஓடிய நபர் ராக்கி ஆவார். ஆஜர் எதிரி தான் மேற்படி தேதியில் சட்டையில்லாமல் ஓடிய நபர் ஆவார். அதிகாலை 12.45 மணிக்கு மேற்படி மருத்துவர் தனபதி வீட்டிற்கு வந்தார்கள். போலீசார் மேற்படி வீட்டை ஆய்வு செய்து படம் வரைந்தார்கள். வரைபடத்திற்கு கீழ் நானும் அஷ்ரப்அலி என்பவரும் கையெழுத்து செய்தோம். மேற்படி வரைபடத்தின் விவரங்களை எழுதி என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். அஷ்ரப் அலியும் கையெழுத்து போட்டார் பார்வை மகஜரில் உள்ள இரண்டவாது

கையெழுத்து என்னுடையததான். அந்த **பார்வை மகஜர் அ.சா.ஆ.3.** சம்பவம் தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. போலீசார் விசாரித்தபோது ஒரு நபர் ஓடி வந்த விபரத்தை நான் குறிப்பிட்டுள்ளேன். போலீசார் என்னை ஒருமுறை விசாரித்தார்கள். போலீசாரிடம் நான் ஒரு வாக்குமூலம் தான் கொடுத்தேன் என்று சொன்னால் சரிதான். நான் போலீசாரிடம் சம்பவத்தை நேரில் பார்த்ததாக குறிப்பிடவில்லை என்றாலும் நான் சம்பவத்தை அதிகப்படுத்தி கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. போலீசாரிடம் நான் சம்பவத்தை பார்த்ததாக கூறாமல் முதல் விசாரணையில் சம்பவத்தை நேரில் பார்த்ததாக கூறுவது உள்நோக்கம் கொண்டது என்று சொன்னால் சரியல்ல. சம்பவத்தின் போது கரண்ட் இருந்தது. நான் பக்கத்து வீட்டைச் சேர்ந்தவன். சம்பவம் வீட்டின் எந்தப் பகுதியில் குறிப்பாக நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவ இடத்தை குறிப்பாக யார் போலீசாரிடம் அடையாளம் காட்டினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். போலீசார் வீட்டின் ஹாலில் சம்பவம் நடந்ததாக குறித்துள்ளார்கள்.

2. அன்றைய தினம் சுமார் பத்து மணியிலிருந்தே போலீசாரின் நடமாட்டம் அங்கு இருந்தது. 10 மணிக்கு போலீசார் சம்பவம் குறித்து விசாரிக்க ஆரம்பித்து விட்டார்கள். அப்போதே எழுத ஆரம்பித்தார்கள் என்றால் சரிதான். எத்தனை மணி நேரம் போலீசார் எழுதிக் கொண்டிருந்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் என்ன நடக்கிறது என்று பார்த்துக் கொண்டிருந்தேன். எனவே நான் பக்கத்து வீட்டைச் சேர்ந்தவன் என்று அடிப்படையில் என்னை போலீசார் அழைத்தார்கள் என்றால் சரிதான். என்னுடைய வீடும் மருத்துவர் தனபதி என்பவர் வீடும் அஷ்ரப் அலி என்பவர் வீடும் கிழக்கு பார்த்த வீடு என்று சொன்னால் சரியல்ல. மேற்படி அஷ்ரப் அலி இறந்துவிட்டார் என்று சொன்னால் சரிதான். மருத்துவர் தனபதி வீட்டிற்கு தெற்கு பக்கமாக மேற்படி அஷ்ரப் அலி வீடு உள்ளது என்று சொன்னால் சரிதான். போலீசார் தயார் செய்த வரைபடத்தில்

என்னுடைய வீடு காட்டப்படவில்லை என்று சொன்னால் வரைபடத்தில் மேற்படி மருத்துவரின் வீட்டுக்கு எதிர் புறமாக என்னுடைய வீடு உள்ளது. என்னுடைய வீடு மேற்படி இடத்தில் இல்லை என்றாலும் நான் தறி நிறுவனம் வைத்திருப்பதால் போலீசாரின் தயவு வேண்டும் என்பதற்காக அவர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

3. சம்பவ இடத்துக்கு அருகில் என்னுடைய வீடு இருக்கிறது என்பதை காட்டுவதற்கு ஏதேனும் ஆவணத்தை போலீசாரிடம் நான் ஒப்படைத்துள்ளேனா என்றால் இல்லை. போலீசார் சம்பவ இடத்திலிருந்து ஏதேனும் தடயங்களை சேகரித்தார்களா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவம் நடந்த பகுதி அருகில் மில் இருப்பதால் ஆள் நடமாட்டம் அதிகம் இருக்கும் பகுதி என்று சொன்னால் சரிதான். மேற்படி பகுதியில் வட மாநில தொழிலாளர்கள் தங்கியிருக்கிறார்கள் என்று சொன்னால் சரிதான். சம்பவத்திற்கு முன்பு எனக்கு சாட்சி சுப்பிரமணி மற்றும் இறந்து போன தங்கராஜ் ஆகியோரை தெரியாது என்றால் சரிதான். எதிரி, மருத்துவர் தனபதி வீட்டுக்கு வரும் வகையில் தெரியும் ஆனால் எனக்கு பழக்கம் இல்லை. எவ்வளவு வருடமாக எதிரி மேற்படி மருத்துவர் தனபதி வீட்டில் இருக்கிறார் என்று எனக்கு தெரியாது. மேற்படி வீட்டில் முன்பு அவரது மனைவி மகளுடன் இருப்பார் அதன் பிறகு அவர் தனியாக இருந்தார் அப்போது அவரது உதவியாளர் சார்லஸ் என்பவர் உடன் இருப்பார்.

4. மேற்படி தனபதி இறந்துவிட்டார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி சார்லஸ் என்பவரும் இறந்துவிட்டார் என்றால் அது எனக்கு தெரியாது. நான் சத்தம் கேட்டவுடன் வீட்டிற்குள் சென்று என்ன பிரச்சனை என்று பார்க்க முயற்சி செய்தேனா என்றால் இல்லை. நான் போலீசாருக்கு தகவல் சொல்லி சத்தமாக உள்ளது என்று சொன்னேனா என்றால் அவர்கள் வீட்டில் எப்போதும் சத்தமாக தான் இருக்கும் அதனால் சொல்லவில்லை. மருத்துவர் தனபதி மது அருந்திவிட்டு இரவு 12 மணி

வரையில் சத்தம் போட்டு கொண்டு இருப்பார். நான் குடியிருக்கும் வீடு என்னுடைய சொந்த வீடாகும். தனபதி வீடு அவரது சொந்த வீடாகும். நான் சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து செய்யவில்லை என்றாலும் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்துவிட்டு சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து போட்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மருத்துவர் தனபதி எங்கள் வீட்டிற்கு அருகில் இருந்து மது அருந்திவிட்டு ஓயாமல் சத்தம் போட்டு இருந்ததால் அவர் மீதான கோபத்தில் நான் தற்போது எதுக்கு எதிராக சாட்சி படிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல என்னுடைய வீடு அங்க இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் போலீசாரின் கையிருப்பு சாட்சி என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:— இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.11.21 18:43:17 +0530

3—ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
DHARAPURAM

**SC. No:145/2021 Deposition of Witness for : P.W.8**

| | | | |
|---|---|---|---|
| Name | : பால்ராஜ் | Caste | |
| Father's Name | : | Calling | |
| Age | : | Taluk | |
| Village | : | District | |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 21-11-2025

**முதல் விசாரணை**

நான் சொரியன்கிணத்துபாளையத்தில் குடி இருக்கிறேன். நான் மினரல் வாட்டர் சப்ளை வேலை செய்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும். 11.5.2017 ஆம் தேதி நான் மூலனூர் சென்று இருந்தேன். நான் போகும் போது கரட்டுப்பாளையம் பேருந்து நிறுத்தத்தில் மூன்று போலீசாரும் ஆஜர் எதிரியும் நின்று கொண்டிருந்தார்கள். என்னுடன் துரை என்பவர் உடன் வந்தார். என்ன என்று பார்க்கலாம் என்று போலீசாரிடம் சென்றேன். போலீசார் எதிரியை விசாரித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது ராக்கி தங்கராஜ் என்பவரை குத்திவிட்டது தொடர்பாக வாக்குமூலம் கொடுத்துக் கொண்டிருந்தார். அதை போலீசார் எழுதிக்கொண்டு என்னிடமும் துரை என்பவரிடமும் சாட்சி கையெழுத்து வாங்கினார்கள். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது ஆகும். எதிரி தன்னுடன் வந்தால் கத்தி மற்றும் பேண்டை எடுத்துக் கொடுப்பதாக சொன்னார். அதன் அடிப்படையில் சொரியன் கிணத்து பாளையத்தில் இருக்கும் எதிரியின் வீட்டிற்கு சென்றோம் அங்கு பாத்ரூமில் இருந்து கத்தி மற்றும் ஒரு பச்சை கலர் பேன்டை ராக்கி எடுத்துக் கொடுத்தார். அதை போலீசார் மகஜரில் கைப்பற்றி என்னிடம் சாட்சி கையெழுத்து வாங்கினார்கள் துரை என்பவரும் சாட்சி கையெழுத்து போட்டார். **ஒப்புதல்**

**வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.4, கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.5. என்னிடம் காட்டப்படும் கத்தி தான் அன்றைய தினம் கைப்பற்றப்பட்ட கத்தியாகும் அது சா.பொ.2 என் முன்னிலையில் கைப்பற்றப்பட்ட பச்சை நிற பேன்ட் சா.பொ.3** சம்பவம் தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. சம்பவ தினத்தன்று நான் மூலனூருக்கு என்ன வேலைக்காக சென்று கொண்டிருந்தேன் என்று போலீசாரிடம் சொன்னேனா என்றால் இல்லை. நான் ஆவணங்களில் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டதால் தான் மேற்படி தினத்தில் என்ன காரணத்துக்காக யாரை பார்ப்பதற்காக மூலனூர் சென்றேன் என்று என்னால் குறிப்பாக சொல்ல முடியவில்லை என்று சொன்னால் சரியல்ல. போலீசாரிடம் நான் இருசக்கர வாகனத்தில் சென்றதாக குறிப்பிட்டுள்ளேன். மேற்படி வாகனத்தின் பதிவு எண்ணை நான் போலீசாரிடம் சொல்லவில்லை. அவ்வாறு எந்த வாகனத்திலும் பயணம் செய்யாதால்தான் மேற்படி பதிவு எண்ணை நான் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரியின் வீடு வடக்கு பார்த்த வீடு ஆகும். நான் இருசக்கர வாகனத்தில் தான் எதிரி வீட்டுக்கு சென்றேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சி கையெழுத்து போடும்போது நான் வேறு வேலையாக செல்கிறேன் என்று போலீசாரிடம் சொன்னேனா என்றால் இல்லை. போலீசார் அளவீடு செய்யும் கருவி ஏதேனும் வைத்திருந்தார்களா என்றால் இல்லை. கைப்பற்றப்பட்ட கத்தியின் குறிப்பான அடையாளம் எதுவும் என்னால் சொல்ல முடியுமா என்றால் முடியாது மரப்பிடி போட்ட கத்தியாகும். கைப்பற்றப்பட்ட பேண்டில் அதனுடைய பிராண்ட் பெயர் அல்லது டெய்லருடைய முகவரி இருந்ததா என்றால் அதை நான் பார்க்கவில்லை. நாங்கள் அனைவரும் பாத்ரூம் சென்றோம் நான் பாத்ரூம்க்கு வெளியே இருந்தேன் எதிரி உள்ளே சென்று கத்தியை எடுத்து வந்தார். மேற்படி வீட்டில் வேறு யாரும் குடியிருக்கவில்லையா என்றால் இல்லை நான் அதே ஊரைச் சேர்ந்தவன் என்பதால் அது எதிரியின் வீடு என்று எனக்கு தெரியும்.

2. நானும் இறந்து போன தங்கராஜ், சாட்சி சுப்பிரமணியமும் உறவினர் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய மாமியார் வீடு ராக்கி வீட்டிலிருந்து இரண்டு வீடு தள்ளி உள்ளது நான் அங்கு தான் முன்பு குடியிருந்தேன். ராக்கி என்னுடைய உறவினர். சுப்பிரமணி, நான், ராக்கி ஆகியோர் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். மேற்படி ராக்கி நீண்ட நாட்களாக அவரது வீட்டில் இல்லாமல் கச்சேரிவலசில் இருந்தார் என்று சொன்னால் சரியல்ல

அவரது வீட்டில் தான் இருந்தார். நான் உள்ளூர் என்பதால் எனக்கு அவர்களது வீட்டு பிரச்சனைகள் தெரியும் என்று சொன்னால் சரிதான். சுப்பிரமணியனின் பெண்ணை எதிரி கூட்டிச் சென்ற விவரம் எனக்கு தெரியும். சம்பவம் நடந்த அன்று இரவு இறந்து போன நபர் இறப்பதற்கு முன்பே எதிரி இரவு 9.00 மணிக்கு நல்லூர் காவல் நிலையத்தில் முன்னிலையாகிவிட்டார் என்றாலும் அங்கிருந்து அவரை 11.00 மணிக்கு வெள்ளகோவில் காவல் நிலையத்திற்கு கொண்டு சென்று விட்டார்கள் என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது. எதிரியை 12.05.2017 ம் தேதி வெள்ளக்கோயில் மூலனூர் ரோட்டில் வைத்து போலீசார் கைது செய்ததாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரி வெள்ளக்கோயில் காவல் நிலையத்திற்கு கொண்டு சென்ற பிறகு அனைத்து ஆவணங்களும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டன என்றாலும் நான் அங்கு கையெழுத்து செய்துவிட்டு அவரது வீட்டில் இருந்து சான்று பொருட்களை கைப்பற்றியதாகவும் அதில் நான் கையெழுத்து போட்டதாகவும் பொய்யாக குறிப்பிடுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு காவல் நிலையத்தில் பழக்கம் எதுவும் இல்லை. நான் போலீசாருக்கு ஆதரவாகவும் சுப்பிரமணியனுக்கு ஆதரவாகும் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டுவிட்டு வழக்கில் பொய்யான சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரி அல்ல நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எதிரியை கைது செய்யப்படவில்லை என்றாலும் வாக்குமூலம் ஏதும் பதிவு செய்யப்படவில்லை என்றாலும் அதன் அடிப்படையில் சான்று பொருட்கள் கைப்பற்றப்படவில்லை என்று சொன்னாலும் சரியல்ல.

**மறுவிசாரணை:- இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN
Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.11.21 18:43:33 +0530

3-ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.